## தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு – 2017

---

தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவறான நிதி நிலைமை கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று மற்றும் உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று , காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுகளின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1994 இன் 11 ஆம் இலக்க விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பத்தை முன்னேற்றும் சட்டத்தின் vii ஆம் பகுதியின் 40ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2) (சீ) ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) ஆம் பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று 2018 மே 25 ஆந் திகதி ஆணைக்குழுவின் தலைவருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிற கூற்றுகளிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுபாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக் கூற்றுக்ககளின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும் . அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக் கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்வதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் ஆணைக்குழுவின் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுபாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுபாடுகளின் விளைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக் கூற்றுக்களின் ஒட்டு மொத்த சம்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்காக தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**2 நிதிக் கூற்றுக்கள்**

**2.1 அபிப்பிராயம்**

நிதிக்கூற்றுக்களானவை தேசிய விஞ்ஞான மற்றும் தொழிலநுட்ப ஆணைக்கு 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையை அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

1994 இன் 11 ஆம் இலக்க விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பத்தை முன்னேற்றும் சட்டத்தின் 5 (ஆ) ஆம் பிரிவின் பிரகாரம் அரச மற்றும் தனியார் துறை தொழில் முயற்சிகளினால் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பத்தை பயன்படுத்துவது தொடர்பாக கடந்த ஆண்டு இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அலுவல்களின் மீளாய்வு அறிக்கை அமைச்சருக்கு சமர்பிக்கபட வேண்டும்மெனினும் 2016 ஆண்டு மற்றும் 2017 ஆண்டுகளுக்கான அவ் அறிக்கை அமைச்சருக்கு சமர்பித்திருக்கவில்லை.

**2.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

எட்டாவது இரண்டாண்டு விஞ்ஞான தொழில்நுட்ப மாநாட்டிற்காக 2015 ஆண்டு முதல் செலுத்த வேண்டியிருந்த (Biennial Conference on Science and Technology VIII ) ரூபா 50,000 தொகையினை தீர்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**3 நிதி மீளாய்வு**

**3.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகராம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி முடிவடைந்த ஆண்டிற்கான ஆணைக்குழுவின் நிதி விளைவுகள் ரூபா 4,141,953 இற்கான பற்றாக்குறை ஒன்று காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 826,191 தொகையாக காணப்பட்டமையால், முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வண்டின் நிதி விளைவுகளில் ரூபா 3,315,762 இற்கான வீழ்ச்சி ஒன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டிற்கான மூலதன மானியம் ரூபா 3,693,175 இனால் குறைவடைதல் மேற்கூறிய நிதிவிளைவுகளின் வீழ்ச்சிக்கு முக்கிய காரணமாக இருந்துள்ளது.

மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2015 ஆண்டு தவிர ஏனைய ஆண்டுகளின் போது நிதி பற்றாக்குறைகள் ஏற்பட்டிருந்ததுடன் 2013 ஆண்டின் போது ரூபா 130,785 தொகையாக இருந்த பற்றாக்குறை மீளாய்வண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 4,141,953 தொகை வரை அதிகரித்திருந்தது. எவ்வாறாயினும், நிதி விளைவுகளுக்கு ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறை அல்லாத சொத்துகளுக்கான பெறுமானத் தேய்வினை சீராக்கல் செய்த போது 2013 ஆண்டின் போது ரூபா 12,779,734 தொகையான பங்களிப்பு 2016 ஆண்டளவில் ரூபா 19,194,406 தொகை வரை இடையறாமல் வளர்ச்சி அடைந்திருந்த போதிலும் மீளாய்வண்டின் போது ரூபா 15,642,745 வரை குறைந்திருந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான மீளாய்வு

முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக சபையின் நடைமுறை விகிதாசாரம் 0.95 முதல் 0.28 வரையும் விரைவு விகிதாசாரம் 0.91 முதல் 0.26 வரையான வீழ்ச்சியடைந்திருந்தது. மீளாய்வாண்டின் போது நடைமுறை பொறுப்புக்கள் ரூபா 4,262,526 இனால் அதிகரித்திருத்தல் அதற்கான முக்கியமான காரணமாக இருந்ததுடன் தொழிற்படு மூலதன சிக்கல்கள் ஏற்படக்கூடிய இடர் ஒன்று ஏற்படக் கூடும் என கணக்காய்வாய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 4 செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

#### 4.1.1 திட்டமிடல்

சபையினால் 2016 ஆண்டு முதல் 2020 ஆண்டு வரை செயல்நடவடிக்கை திட்டமொன்று தயாரித்திருந்த போதிலும் அதனை பணிப்பாளர் சபைக்குச் சமர்ப்பித்து அங்கீகாரத்தைப் பெற்றிருக்கவில்லை.

#### 4.1.2 செயல் ஆற்றுகை மற்றும் மீளாய்வு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1995 இன் 11 ஆம் இலக்க விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பத்தை முன்னேற்றும் சட்டத்தின் 5(அ) ஆம் பிரிவில் குறிப்பிட்டுள்ள ஆணைக் குழுவின் கடமைகளுடன் தொடர்புடைய கொள்கைகள் திட்டங்களும் உட்பட விஞ்ஞான மற்றும் தொழில் நுட்பத்தின் அபிவிருத்திக்கான கொள்கைகள் திட்டமிடல் தொடர்பாக அரசுக்கு ஆலோசனை வழங்கல் ஆணைக் குழுவின் கடமைகளாகும் எனினும் 2017 ஆண்டின் போது சபையினால் அதன் பிரகாரம் செயற்பட்டிருப்பதற்கான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்பித்திருக்கவில்லை.

(ஆ) அணி சேரா நாடுகளின் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிலையத் (NAM) திற்கு மீளாய்வாண்டின் போது வருடாந்த பங்களிப்புக் கட்டணமாக ரூபா 3,063,459 இற்கான தொகையொன்று செலுத்தப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது அந்த நிலையத்தினால் நடத்தப்படிருந்த 06 செயலமர்வுளில் 04 செயலமர்வுகளுக்காக மாத்திரம் இலங்கை பிரதி நிதிகளை பங்குபற்றி வைத்து இருந்தன.

(இ) நிறுவனம்சார் மீளாய்வு (Institutional Reviews) இன் கீழ் 2017 ஆண்டின் போது 5 அரச மற்றும் தனியார் நிறுவனங்களை மீளாய்வு செய்திருந்த போதிலும் அவ் அலுவல்களை இரண்டு நிறுவனங்களில் மாத்திரம் பூர்த்தி செய்திருந்தது.

(ஈ) செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் தேசிய ஆய்வுகள் மற்றும் அபிவிருத்தி சட்டகத்தினை மேம்படுத்தும் நிகழ்ச்சி திட்டத்தின் (NRDF) கீழ் திட்டமிட்டிருந்த 30 நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்தி பூர்த்தி செய்வதற்கு திட்டமிட்டிருந்த போதிலும் ஆண்டின் போது 12 நிகழ்ச்சி திட்டங்கள் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.

(உ) விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப கொள்கை கற்கை மற்றும் வழங்கள் செயற்திட்டத்தின் ஊடாக பூர்த்தி செய்யப்பட வேண்டிய நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பாக 3 கொள்கை தொகுப்புகள் ஆண்டின் போது தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 பதவியணி முகாமைத்துவம்

2015 ஜுன் 09 ஆம் திகதி முகாமைத்துவ சேவை திணைக்களத்தினால் சிரேஷ்ட நிலைமையைச் சேர்ந்த ‘‘சிரேஷ்ட விஞ்ஞானி’’ (Senior Scientist) 2 பதவிகள் அங்கீகரிக்கப்ட்டிருந்த போதிலும், 2017 ஜுலை 31 திகதி ஒரு வெற்றிடத்திற்காக மாத்திரம் ஆட் சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் மீதியான வெற்றிடத்திற்காக இந்த அறிக்கைத் திகதி வரையும் ஆட்சேர்ப்பு நடை பெற்றிருக்கவில்லை மேலும் Data Base Associater பதவி 2017 செப்டம்பர் 03 ஆம் திகதி முதல் வெற்றிடமாகக் காணப்பட்ட போதிலும் இவ் அறிக்கை திகதி வரையும் அதற்காக ஆட்சேர்ப்பு மேற்கொள்வற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை

### 4.4 நிதியத்தின் குறைபயன்பாடு

2017 வருடாந்த பாதீட்டின் மூலம் மீண்டுவரும் செலவுகளின் கீழ் ஊழியர்களின் முன்னேற்றத்திற்காக (Staff Development) ரூபா 10,000 தொகையும் மூலதனச் செலவுகளின் கீழ் எட்டாவது இரண்டாண்டு விஞ்ஞான தொழில்நுட்ப மாநாடு (BICOST – VIII) இற்காக ரூபா 300,000 தொகையையும் ஒதுக்கியிருந்த போதிலும் அந்த மொத்த தொகையையும் பயன்படுத்தப்பட்டிருக்காததுடன் நலன்புரி நிகழ்ச்சி திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 200,000 இற்கான தொகையில் 98 சதவீதம் நடைமுறை ஆண்டின் போது பயன்படுத்தியிருக்கவில்லை.

### 4.5 வாகனப் பயன்பாடு

ஆணைக் குழுவின் தலைவர் மற்றும் பணிப்பாளர் நாயகத்திற்காக முறையே ரூபா 1,700,000 தொகை மற்றும் ரூபா 4,600,000 தொகை கிரயத்தையுடைய 02 மோட்டார் வாகனங்கள் நடைமுறை ஆண்டின் போது ஒதுக்கப்பட்டிருந்தது. எனினும் இந்த இரண்டு உத்தியோகத்தர்களும் தனிப்பட்ட வாகனங்களை பயன்படுத்தி பிரயாணப் படி பெற்றுக் கொண்டிருந்த காரணத்தினால் அந்த வாகனங்களை பயன்படுத்தியிருக்காததுடன் முறையே நடைமுறை ஆண்டின் போது 994 கீ.மீ மற்றும் 660 கி.மீ மாத்திரம் ஓட்டப்பட்டிருந்தது. இதன் காரணமாக இந்த வாகனங்கள் குறைபயன்பாட்டு காணப்பட்டதென வாகனங்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த சாரதிகளின் சேவையும் வினைத்திறனுடன் பெற்றிருக்கவில்லை என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 5 நிலைபேறான அபிவிருத்தி

### 5.1 நிலைபேறான அபிவிருத்தியின் குறிக்கோள்களை நெருங்குதல்

நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகளின் 2030 ஆண்டு ‘‘நிகழ்ச்சி திட்டத்தின்’’ பிரகாரம் அனைத்து நிறுவனத்தினாலும் செயற்பட வேண்டிக் காணப்பட்டதுடன் அதன் பிரகாரம் சபையினால் தனது நோக்கெல்லையின் கீழ் வரும் கருமங்கள் தொடர்பாக எவ்வாறு செயற்பட வேண்டுமென்பது தொடர்பாக அறிந்து நிலைபேறான அபிவிருத்தியின் குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை இனங்காணல் மேற் கெள்ளப்பட்டிருந்தது. எனினும் அந்த இலக்குகளை நெருங்குவதற்கு தயாராகும் போது ஏனைய நிறுவனங்களுடன் சிறந்த கூட்டிணைப்பு ஒன்று காணப்படாமையினால் இலக்காக இருந்த குறிக்கோள்களை நோக்கி நெருங்குவதற்கு திட்டங்கள் தயாரிக்கும் போது மற்றும் முற்தயாரிப்புச் செயற்பாடு மிகவும் மந்த போக்கில் மற்றும் பலவீன மட்டத்தில் காணப்பட்டது என அவதானகிக்கப்பட்டது.

## 6 கணக்களிப்பொறுப்பும் நல்ல ஆளுகையும்

### 6.1 உள்ளகக் கணக்காய்வு

இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிராமணங்கள் 133 இன் பிரகாரம் ஆணைக் குழுவிற்காக உள்ளகக் கணக்காய்வு அலகு ஒன்று நிறுவுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன் அமைச்சின் உள்ளக கணக்காய்வு அலகின் மூலம் கணக்காய்வு விடயம் அணவல் செய்யப்பட்டிருந்தது. எனினும் அமைச்சினால் கணக்காய்வு செய்ததற்கான உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் நிதிப் பிரமாணம் 134(3) பிரிவின் பிரகாரம் கணக்காய்விற்குச் சமர்பித்திருக்கவில்லை.

### 6.2 பெறுகைகள்

ஆணைக் குழுவிற்காக பாதுகாப்பு சேவை பெற்றுக் கொள்ளும் மற்றும் துப்புரவு ஏற்பாட்டு சேவை பெற்றுக் கொள்வதற்கான உடன்படிக்கைகளின் கால வரைகள் முறையே 2017 ஜுலை 31 திகதி மற்றும் 2017 நவம்பர் 01 திகதிகளில் முடிவடைந்திருந்த போதிலும் 2006 அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகள் கடைபிடிக்காமலும் உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்படாமலும் அந்த வழங்குனர்களிடம் 2018 மே 31 திகதி வரை அச் சேவைகளை பெற்றிருந்தனர்.

## 7. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுபாட்டு குறைபாடுகளை அவ்வப்போது ஆணைக்குழுவின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது கீழ்வரும் கட்டுபாட்டு பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| முறைமைகள் மற்றும் கட்டுபாட்டு பரப்புகள் | அவதானிப்புகள் |
|---|---|
| (அ) பாதீட்டு கட்டுபாடு | உரிய முறையில் மதிப்பீடுகள் தயாரித்திருக்காமையின் காரணமாக ஏற்பாடுகள் சேமிக்கப்படல். |
| (ஆ) பதவியணி நிருவாகம் | விஞ்ஞானம்சார் பதவியணிப் பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடவடி க்கை எடுக்காமை. |